1990 ஏப்ரல் 10]

9-40 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விடையில் வேண்டுமானால் கோவைக் குற்றாலத்தைச் சேர்க்கலாம். வினா தொடர் பற்றது.

ஊராட்சி ஒன்றிய இடங்குகளில் அரிசி இருப்பு குறைவு.

*467—திரு. கே. ஆர் இராமசாமி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பசும்பொன் தேவர் திருமகள் மாவட்டத்தில், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (என்.ஆர்.ஈ.பி.) ஊரக நிலமற்றோர் வேலை உறுதி திட்டம் போன்றவற்றிற்கு வழங்கப்பட்டிருக்கும் அரிசி, ஊராட்சி ஒன்றிய கிடங்குகளில் இருப்பில் இருக்கும் அரிசி இருப்பு பதிவேட்டில் காணப்படும் அளவைவிட குறைவாக இருப்பதால், அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் (மற்றும்) ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அரிசி மற்றும் கோதுமையும் இருப்பில் குறைவாக உள்ளது. இக்குறைபாட்டிற்குக் காரணமான அலுவர்களிடமிருந்து தொகையை வசூலிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. ஆர். இராமசாமி :: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது மாவட்டத்திலே எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்களிலே இவ்வாறு குறைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளையார்கோயில். சாக்கோட்டை, கல்லல் சிங்கம்புணரி, கள்ளங்குடி, சிவகங்கை, இளையாங்குடி, திருபத்தூர் மானாமதுரை, திருபுவனம்.

திரு. கே. ஆர். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநேகமாக அத்தனை ஊராட்சி ஒன்றியங்களிலேயும் இது போலக் குறைவு ஏற்பட்டிருப்பதாக அமைச்சர் கூறுகிறார். தமிழகத்தினுடைய நிலை என்னவென்பதை அமைச்சரவர்கள் அறிய வேண்டும். இந்தத் தவறுகளைச் செய்த அதிகாரிகள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்குமா? சுமார் இரண்

டாண்டுகள் ஆகியும், இதுவரையும் நடவடிக்கை எடுத்ததாக நான் அறியவில்லை. இதற்கு உடனடியாக இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆட்சி வந்ததற்கு முன்னாலே, 89-க்கு முன்னால் நடைபெற்ற நிகழ்ச்சிகள். அது தொடர்ந்து எல்லா மாவட்டங்களிலும் இருக்குமா என சந்தேகப்பட்டுத்தான் Zonal Officer-ஐ விட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

கல்லுப்பட்டி பேரையூர் சாலை

*2072—திரு. ஆ. அதியமான் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாவட்டம், கல்லுப்பட்டி-பேரையூர் நெடுஞ் சாலையை அகலப்படுத்தவும், செப்பனிடவும் அரசு நடவடிக் கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

அரசின் நிதி நெருக்கடியால் அண்மையில் எடுத்துச் செய்யும் வாய்ப்பில்லை.

சேலம் பேரூர் பாதையை அகலப்படுத்துதல்.

*3253—திரு. செ. பெருமாள் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலத்திலிருந்து அயோத்தியாபட்டினம் வழியாக பேரூர் செல்லும் பாதையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

இல்லை.

திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, சேலத்திலிருந்து அயோத்தியாபட்டினம் வழியாகப் பேரூர் செல்லும் பாதை குறுகிய பாதையாக இருப்பதால், இப்பொழுது வாகன வசதிகள் பெருகிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு இந்த அரசு முன் வந்து அந்தப் பாதையை அகலப்படுத்தும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.